

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது. கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச்செல்வன், சேதுநாதன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### செஞ்சி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் –

# புதிய உறுப்பினர்களை தி.மு.க.வில் சேர்க்க வேண்டும்!

## மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் அறிவுறுத்தல்!

செஞ்சி, செப். 3 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் செஞ்சியில் உள்ள தமிழ் திருமகன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட அமைத்தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், சாந்தி சுப்ரமணியன், நாராயணமூர்த்தி, அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் அவர் பேசுகையில்:

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

அந்த வகையில் 45 வயதுக்கு உட்பட்ட புதிய உறுப்பினர்களை கழகத்தில் சேர்ப்பதற்கு தி.மு.க. நிர்வாகிகள் தங்களது பணியை தீவிரப்படுத்த வேண்டும். இந்த இயக்கத்தை இன்னும் 200 ஆண்டுகளுக்கு வழி நடத்த வேண்டும். தி.மு.க. நிர்வாகிகள் கூடுதலாக கவனம் செலுத்தி தங்களது வீட்டில் உள்ள பிள்ளைகளை தி.மு.க. இயக்கத்தில் உறுப்பினராக சேர்க்கும் பணியை செய்ய வேண்டும்.

மேலும் தலைமைச் செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மறு சீரமைப்பு பணிகள் 200 சதவீதமாக எந்த ஒரு தொய்வும் இல்லாமல் பணி நடைபெறுவதற்கு உறுதிமொழி எடுத்துக் கொள்வதாக விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சேதுநாதன், செந்தமிழ்ச் செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், ஒன்றிய துணை பெரும் தலைவர்கள் ஜெயபாலன், விஜயலட்சுமி முருகன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி, மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், ஊராட்சி, வார்டு கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

### ஜல்லிக்கட்டு:

# “இளைஞர்களையும், சமூகத்தையும் பாழாக்குகிறது” என்று கொச்சைப்படுத்திப் பேசிய த.வெ.க. எம்.எல்.ஏ.க்கு கண்டனம்!

## கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிக்கை!

திருப்பூர், செப்.3-

ஜல்லிக்கட்டு மற்றும் அதற்காக அமைக்கப்பட்ட பிரத்யேக மைதானத்தை அது “இளைஞர்களையும், சமூகத்தையும் பாழாக்குகிறது” என்று கொச்சைப்படுத்திப் பேசிய த.வெ.க. எம்.எல்.ஏ.க்கு கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மா.வெ.கருப்பையா ஜல்லிக்கட்டு மற்றும் அதற்காக அமைக்கப்பட்ட பிரத்யேக மைதானத்தை “இளைஞர்களையும் சமூகத்தையும் பாழாக்குகிறது” என்று கொச்சைப்படுத்திப் பேசியுள்ளதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஏறுதழுவுதலின் சர்வதேச மையமான அலங்காநல்லூரைத் தனது தொகுதியிலேயே கொண்ட ஒரு மக்கள் பிரதிநிதியிடமிருந்து வந்துள்ள இந்த அறிக்கை, தமிழ்நாட்டின் உயிரியல் கலாச்சாரப் பாரம்பரியம், வேளாண் பொருளாதாரம் மற்றும் நாகரிக வரலாறு பற்றிய அவரது அறியாமையையே வெளிப்படுத்துகிறது.

4,500 ஆண்டுகள் பழமையான உயிரியல்கலாச்சார மரபு :ஏறுதழுவுதல் என்பது வெறும் பொழுதுபோக்கோ அல்லது சீரழிக்கும் விளையாட்டோ அல்ல, அது நமது நாட்டு மாட்டினங்களைப் பாதுகாக்கவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அரவணைக்கவும், கிராமப்புற வீரத்தைப் போற்றவும் விளங்கும் இன்றியமையாத உயிரியல் கலாச்சார நடைமுறையாகும். இன்றைய ஜல்லிக்கட்டுக்கும் நமது தொன்மைக்கும் உள்ள தொடர்பு அசைக்க முடியாத தொல்லியல் மற்றும் வரலாற்றுச் சான்றுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

சிந்து சமவெளி முதல் கீழடி வரை : சிந்து சமவெளி நாகரிகத்தில் திமில்கொண்ட காளையை மனிதன் தழுவுவது போன்ற முத்திரைகள் கிடைத்துள்ளன. அதற்கு நேரடி கலாச்சாரத் தொடர்ச்சியாக கீழடி மற்றும் மயிலாடும்பாறை அகழாய்வுச் சான்றுகள் விளங்குகின்றன.

இலக்கிய மற்றும் ஆய்வுச் சான்றுகள் : ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரியும் ஆய்வாளருமான ஆர்.பாலகிருஷ்ணன் அவர்களின் “ஒரு நாகரிகத்தின் பயணம் : சிந்து முதல் வைகை வரை” என்ற நூலில் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, திமில் கொண்ட காளைகளும் (Bos indicus) ஏறுதழுவுதல் பண்பாடும் 4,500 ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சி கொண்டவை. இத்தகைய தொன்மையான பாரம்பர்யத்தைச் “சீரழிவு” என்று கூறுவது தமிழர்களின் நாகரிக வரலாற்றையே அவமதிப்பதாகும்.

2017 வரலாற்றுச் சிறப்புமிக்க இளைஞர் மாணவர் எழுச்சி :

நீதிமன்றத் தடைகளிலிருந்தும், நாட்டு மாடுகளுக்கு எதிரான அமைப்புகளிடமிருந்தும் ஜல்லிக்கட்டை மீட்டெடுக்க, கடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னை மெரினா கடற்கரை முதல் தமிழ்நாடு முழுவதும்திரண்டெழுந்தவர்கள் இளைஞர்களும், மாணவர்களும், விவசாயிகளும், உலகெங்கும் வாழும் புலம்பெயர் தமிழர்களுமே ஆவர்.

அந்தப் போராட்டத்தின் போது, நமது பாரம்பர்ய விளையாட்டையும் நாட்டு மாட்டினங்களையும் பாதுகாக்க அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் மக்களுடன் கைகோர்த்து நின்றனர். அப்படிப்பட்ட இளைஞர்களையும் விளையாட்டு ஆர்வலர்களையும் ஜல்லிக்கட்டு பாழாக்குகிறது என்று சித்தரிப்பது, நவீன இந்திய வரலாற்றின் மிக உன்னதமான அமைதிவழி கலாச்சார எழுச்சியைக் கொச்சைப்படுத்தும் செயலாகும்.

SKCRF மற்றும் நாட்டு மாட்டினப் பாதுகாப்பு :

சேனாபதி காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி அறக்கட்டளை (SKCRF), கள அளவிலும், பன்னாட்டு அளவிலும் நாட்டு மாட்டினங்களின் சூழலியல் தேவையை நிலைநிறுத்த பல சதாப்தங்களாகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. தீவிர கால நிலை மாற்றச் சூழலில், நாட்டு மாடுகள் அழிந்துவிடாமல் விவசாயிகள் பொலி காளைகளை வளர்ப்பதற்கு முக்கியப் பொருளாதார உந்துசக்தியாக இருப்பது ஜல்லிக்கட்டே ஆகும்.

எனவே, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் மா.வெ.கருப்பையா தனது ஆட்சேபனைக்குரிய கருத்தை உடனடியாகத் திரும்பப் பெற்று, தமிழ்நாட்டு மக்களிடம் நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்க வேண்டும், அத்துடன் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலத்தின் வரலாற்றுப் பெருமையை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். கலாச்சாரப் பெருமையும் வேளாண் நலனும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல—அவையே தமிழ்ச் சமூகத்தின் இரு கண்கள் என்று கழக சுற்றுச் சூழல் அணி செயலாளர், சேனாபதி காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி அறக்கட்டளை (SKCRF) நிர்வாக அறங்காவலர் கார்த்திகேய சிவசேனாபதி கூறியுள்ளார்.



கழகத்தின் கொள்கைகளை இணையத்தில் பதிவிடுவதில் கழகத் தலைவர் அவர்கள், இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி ஆகியோர்களின் பதிவுகளை தனது முகநூல் பக்கத்தில் பதிவிடுவது கழகத்திற்கு எதிராக கருத்துக்களை பதிவிடும் நபர்களுக்கு தரமான பதில்களை வழங்குவதில் சிறந்து விளங்கி வரும் தென்காசி தெற்கு மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் சுரண்டை ஹக்கீம் காய்ச்சல் காரணமாக தனியார் மருத்துவமனை சிகிச்சை பெற்று வருகிறார். தகவல் அறிந்த தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன், மருத்துவமனையில் ஹக்கீமை நேரில் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்து மருத்துவ உதவி தொகை வழங்கினார். உடன் கிழப்பாவூர் பேரூர் செயலாளர் ஜெகதீசன், ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர்கள் துரைச்சாமிபுரம் கணேசன், தர்மராஜ் ஆகியோர் உள்ளனர்.

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் நாளை (4.9.2026 வெள்ளிக்கிழமை) மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும் காஞ்சிபுரம் மாவட்ட தலைமைக் கழக பிரதிநிதிகள் என்.மருதுகணேஷ், திருமதி. கே.ராணி ரவிச்சந்திரன், செங்கல்பட்டு, மாவட்ட தலைமை கழக பிரதிநிதிகள் சி.என். அண்ணாதுரை எம்.பி., கோவி.லெனின் ஆகியோர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு கூட்டம் நடைபெற உள்ளது.

| நாள் 4.9.2026 | சட்டமன்ற தொகுதிகள் | தலைமைக் கழக பிரதிநிதிகள் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| காலை 10.00 மணி | காஞ்சிபுரம் உத்திரமேரூர் | என்.மருதுகணேஷ் திருமதி.கே.ராணி ரவிச்சந்திரன் | பிரியா மகால் உத்திரமேரூர் |
| பிற்பகல் 2.00 மணி | மதுராந்தகம் செய்யூர் | சி.என்.அண்ணாதுரை எம்.பி. கோவி.லெனின் | முகுந்தன் மகால் கருங்குழி |

எனவே, இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், செயலாளர்கள், கழக நிர்வாகிகள், மாநில, மாவட்டக் கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகம் மறுசீரமைப்பு குறித்து

2.செப்.15, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த விழா மற்றும் முப்பெரும் விழா

3. கழக ஆக்கப் பணிகள்

**க.சுந்தர்**
செயலாளர் - காஞ்சிபுரம் தெற்கு
மாவட்ட தி.மு.க.

### கழகத் தலைவர் எடுக்கும் முடிவுகளுக்கேற்ப கழகத் தகவல் தொழில்நுட்ப அணி

# களத்திலும் சமூக வலைதளத்திலும் செயல்படும்!

## அணிச்செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!





சென்னை, செப்.3-

திராவிட நாயகர் கழகத் தலைவர் அவர்கள் மேற்கொண்டுள்ள கழக சீரமைப்பு பணிகளுக்கு ஏற்ப தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி தன்னை தகவமைத்துக் கொண்டு, களத்திலும் சமூக வலைத்தளத்தி லும் முன்னிலும் வேகமாக செயல்படும் என அணிச்செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தலைமையில் செப்டம்பர் 1ந் தேதியன்று சென்னை அன்பகம் அரங்கில் நடைபெற்ற மாநிலத் துணை செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் அணியின் இணைச்செயலாளர் ஆலோசகர்கள் ஆகியோருடன் சிறப்பு விருந்தினராக மாநிலத் திட்டக்குழு முன்னாள் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன:

1. 75 ஆண்டு காலத்தை கடந்து தமிழ் சமுதாயத்திற்காக பாடுபடுகின்ற சமூக நீதி பேரியக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் காலத்திற்கு ஏற்ப தன்னை மறுக்கட்டமைப்பு செய்து புதுப்பித்து வருகிறது. தற்போதைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி காலத்திற்கு ஏற்ப கழகத்தில் உரிய சீரமைப்பை மேற்கொண்டுள்ள நம் உயிர்நிகர் கழகத் தலைவர் திராவிட நாயகன் அவர்களுக்கு இந்த கூட்டம் தனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து, தலைவர் எடுக்கும் முடிவுகளுக்கு ஏற்ப தகவல் தொழில்நுட்ப அணி தன் பணியை தொடர்ந்து செய்யும் என தீர்மானிக்கப்படுகிறது.

2.ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தமிழ் நாட்டு மக்களின் குரலாக ஒலிக்கின்ற இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளம் தலைவர் அவர்கள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக தன் பணியை சிறப்பாக மேற்கொண்டு, இன்றைய ஆட்சியின் அவலங்களை பேரவையில் தோல் உரித்து காட்டுகிறார். திமுகவின் எதிர்கால நம்பிக்கையான இளம் தலைவர் அவர்களின் சட்டமன்ற செயல் பாடுகள் மற்றும் களச் செயல்பாடுகளுக்கு கழக தகவல் தொழில்நுட்ப அணி தனது நன்றியை தெரிவித்து அவருடைய செயல்பாடுகளுக்கு என்றும் துணை நிற்போம் என்று தீர்மானிக்கிறது.

3. காவிரி டெல்டா விவசாயிகள் தண்ணீர் இன்றி தவித்து வரும் நிலையில் அவர்களுக்காக குரல் கொடுத்த கழகத்தின் இளம் தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை காழ்ப்புணர்ச்சியுடன் கைது செய்த த.வெ.க. அரசின் சட்டவிரோத நடவடிக்கைக்கு கழகத் தகவல் தொழில்நுட்ப அணி தனது கண்டனத்தை தெரிவிக்கிறது.

4.கழகத் தலைவர் திராவிட நாயகன் அவர்களின் வழி காட்டுதலில், கழக இளம் தலைவர் அவர்களின் ஒத்துழைப்புடன் கழக தகவல் தொழில்நுட்ப அணி மறு சீரமைப்புக்கு உள்ளாக்கப்பட்டு, முன்னிலும் வேகமாக களத்திலும் தளத்திலும் தனது செயல்பாடுகளை விரிவுபடுத்தி கழகத்திற்கு வலிமை சேர்க்கும் பணியில் முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளும் என இந்த கூட்டம் தீர்மானிக்கிறது.

5.கழகத் தகவல் தொழில்நுட்ப அணி தொடங்கப்பட்டு கடந்த எட்டு ஆண்டுகளாக மிகச் சிறப்பாக செயலாற்றி வரும் அணியின் மூத்த நிர்வாகிகள் தாய்க் கழகத்தில் உரிய பொறுப்பினை பெறும் வகையில், கழகத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு அமைய வேண்டும் என கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த கூட்டம் பணிவான வேண்டுகோள் விடுக்கிறது.

6.மாற்றம் என்று சொல்லி வாக்குகளை பெற்று மக்களை ஏமாற்றி, திராவிட மாடல் ஆட்சியில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக இருந்த தமிழ்நாட்டை பின்னோக்கி இழுத்துச் செல்லும் தவெக அரசுக்கு இந்த கூட்டம் கடுமையான கண்டனத்தை தெரிவிப்பதுடன், த.வெ.க. அரசின் அனைத்து மோசடிகளையும் முழுமையாக அம்பலப்படுத்தி கடைக்கோடி மக்கள் வரை கொண்டு சேர்ப்பது என தகவல் தொழில்நுட்ப அணி தீர்மானிக்கிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# இரா.சடகோபன்

### செப்டம்பர் 3 (1979)



**சென்னையில் கழகத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் ஒருவர்.**

**1961ஆம் ஆண்டு சென்னை நகரக் குடிசை வாழ்வோர் மாநாடு நடத்தி அந்த சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தவர்.**

**கழகத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும், 1959 முதல் 1968 வரை சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், 1965–66இல் துணை மேயராகவும், 1967இல் மாநகராட்சி மத்திய குழு தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.**

**விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்டவர்.**

**தலைவர் கலைஞரின் அன்புக்கு பாத்திரமானவர்.**

## தலைமைக் கழகம்
## தி.மு.க.